| பாராளுமன்றம் (சரத்து 79 முதல் 122 வரை) | Parliament (Articles 79 to 122) |
|---|---|
| • சரத்து 79 - பாராளுமன்ற அமைப்பு, | • Article 79 - Organisation of Parliament, |
| • சரத்து 80 -மாநிலங்களவை அமைப்பு. | • Article 80 - Organisation of the State Councils. |
| • சரத்து 81 - மக்களவை அமைப்பு. | • Article 81 - Organisation of the Lok Sabha. |
| • சரத்து 82-ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பிறகும் தொகுதிகளை மீண்டும் மாற்றியமைத்தல். | • Article 82 - Re-delimitation of constituencies after each census. |
| • சரத்து 83-பாராளுமன்ற அவைகளின் பதவிக்காலம் | • Article 83 - Term of office of the Houses of Parliament |
| • சரத்து 84- பாராளுமன்ற உறுப்பினருக்கான தகுதி.) | • Article 84 - Qualifications for members of Parliament. |
| • சரத்து 85-பாராளுமன்ற அமர்வு, நீட்டிப்பு மற்றும் கலைப்பு. | • Article 85 - Session, extension and dissolution of Parliament. |
| • சரத்து 86-பாராளுமன்ற அவைகளில் உரையாற்றவும் தகவல் அனுப்பவும் குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரம். | • Article 86 - Power of the President to address and send messages to the Houses of Parliament. |
| • சரத்து 87-குடியரசுத் தலைவரின் சிறப்புரை. | • Article 87 - Special address by the President. |
| • சரத்து 88-அவைகள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் தலைமை வழக்கறிஞருக்கு உள்ள உரிமைகள். | • Article 88 - Rights of Ministers and Attorney General in relation to the Houses. |
| • சரத்து 89-மாநிலங்களவையின் தலைவர் மற்றும் துணைத் தலைவரி. | • Article 89 - Chairman and Deputy Chairman of the State Council. |
| • சரத்து 90-மாநிலங்களவையின் தலைவர், துணைத் தலைவரின் விடுமுறை, இராஜினாமா மற்றும் பதவிநீக்கம். | • Article 90-Vacation, resignation and removal of Chairman and Deputy Chairman of the Rajya Sabha. |
| • சரத்து 91-துணைத்தலைவர் அல்லது மற்ற நபர்கள் மாநிலங்களவையின் தலைவராக செயல்படும்போது அவரின் கடமைகள். | • Article 91-Duties of the Deputy Chairman or other persons while acting as Chairman of the Rajya Sabha. |
| • சரத்து 92-மாநிலங்களவையின் தலைவர் அல்லது துணைத் தலைவரின் பதவி நீக்கம் பரிசீலனையில் உள்ளபோது அவர்கள் அவையின் தலைமை பொறுப்பினை ஏற்கக்கூடாது. | • Article 92-The Chairman or Deputy Chairman of the Rajya Sabha shall not assume the presidency of the House while their removal is pending. |
| • சரத்து 93-மக்களவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர். | • Article 93-The Speaker and Deputy Speaker of the Lok Sabha. |

| | |
|---|---|
| • சரத்து 94-மக்களவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரின் விடுமுறை, இராஜினாமா மற்றும் பதவிநீக்கம்.<br>• சரத்து 95- துணை சபாநாயகர் அல்லது மற்ற நபர்கள் மக்களவையின் தலைவராக செயல்படும் போது அவரின் கடமைகள்.<br>• சரத்து 96-மக்களவையின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் பதவி நீக்கம் பரிசீலனையில் உள்ளபோது அவர்கள் அவையின் தலைமை பொறுப்பினை ஏற்கக்கூடாது.<br>• சரத்து 97-மாநிலங்களவையின் தலைவர் மற்றும் துணைத்தலைவர் மக்களவையின் சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோரின் ஊதியங்கள் மற்றும் படிகள்.<br>• சரத்து 98 - பாராளுமன்றத்தின் செயலகம்<br>• சரத்து 99 - பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி.<br>• சரத்து 100 - அவையில் வாக்களிப்பு, உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் அவை செயற்படும் அதிகாரம்.<br>• சரத்து 101- பதவி இடங்கள் காலியாக இருத்தல்.<br>• சரத்து 102- உறுப்பினர்களின் தகுதி இழப்பு..<br>• சரத்து 103- உறுப்பினர்களின் தகுதியிழப்பு பற்றிய தீர்மானத்திற்கான கேள்விகள்.<br>• சரத்து 104 - தகுதியற்ற மற்றும் தகுதிநீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர் சரத்து 99-ன் கீழ் பதவிப்பிரமாணம் மற்றும் உறுதிமொழி எடுக்காமல் அவைக்கு வருகை தந்தாலோ அல்லது அவையில் வாக்களிக்க முயற்சித்தாலோ அவருக்கு வழங்கப்படும் தண்டனை மற்றும் அபராதம்.<br>• சரத்து 105 - பாராளுமன்ற அவை உறுப்பினர்கள் மற்றும் குழு உறுப்பினர்களின் அதிகாரம் மற்றும் சலுகைகள்,<br>• சரத்து 106- உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள். | • Article 94-Vacation, resignation and removal of the Speaker and Deputy Speaker of the Lok Sabha.<br>• Article 95-Duties of the Deputy Speaker or other persons while acting as Chairman of the Lok Sabha.<br>• Article 96-The Speaker or Deputy Speaker of the Lok Sabha shall not assume the presidency of the House while their removal is pending.<br>• Article 97 - Salaries and allowances of the Chairman and Deputy Chairman of the State Council and the Speaker and Deputy Speaker of the Lok Sabha.<br>• Article 98 - Secretariat of Parliament<br>• Article 99 - Oath or affirmation of members of Parliament.<br>• Article 100 - Voting in the House, power to act despite a small number of members.<br>• Article 101 - Vacancies.<br>• Article 102 - Disqualification of members..<br>• Article 103 - Questions for decision on disqualification of members.<br>• Article 104 - Punishment and fine to be imposed on a disqualified or disqualified member who attends the House or attempts to vote in the House without taking the oath and affirmation under Article 99.<br>• Article 105 - Powers and privileges of members of the House of Representatives and Committees,<br>• Article 106- Salaries and allowances of members. |
| • சரத்து 107- மசோதா அறிமுகம் மற்றும் ஒப்புதலுக்கான வழிமுறைகள். | • Article 107- Procedure for introduction and approval of bills. |

| | |
|---|---|
| • மார்க்க 108- சில நேரங்களில் இரு அவைகளின் கூட்டுக்கூட்டம்.<br>• சரத்து 109- பண மசோதா தொடர்பான சிறப்பு செயல்முறைகள்.<br>• சரத்து 110- பண மசோதாவிற்கான வரையறை.<br>• சரத்து 111- பண மசோதாவிற்கு ஒப்புதல் வழங்குதல்.<br>• சரத்து 112- ஆண்டு நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்).<br>• சரத்து 113- திட்டங்கள் தொடர்பாக பாராளுமன்ற நடைமுறைகள்<br>• சரத்து 114- நிதி ஒதுக்கீடு மசோதாக்கள்.<br>• சரத்து 115- துணை மானியம், கூடுதல் மானியம் அல்லது மிகை மானியம் வழங்குதல்.<br>• சரத்து 116 - கணக்கு, கடன்வரவு, விதிவிலக்கு மானியங்களுக்கு வாக்களித்தல்.<br>• சரத்து 117- நிதி மசோதாவின் சிறப்பு விதிகள்.<br>• சரத்து 118- நடைமுறை விதிகள்.<br>• சரத்து 119- நிதி, வணிகம் தொடர்பாக பாராளுமன்ற சட்ட நடைமுறையில் கொண்டுவரப்பட்ட ஒழுங்குமுறைகள்.<br>• சரத்து 120 - பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழிகள்.<br>• சரத்து 121 - பாராளுமன்றத்தில் விவாதம் மீதான தடை.<br>• சரத்து 122 - நீதிமன்றத்தினால் பாராளுமன்ற நடைமுறைகளை விசாரிக்க முடியாது | • Article 108- Joint sitting of both Houses at times.<br>• Article 109- Special procedures relating to money bills.<br>• Article 110- Definition of money bill.<br>• Article 111- Assent to money bills.<br>• Article 112- Annual budget.<br>• Article 113- Parliamentary procedures in relation to schemes<br>• Article 114- Appropriation bills.<br>• Article 115- Grant of supplementary, additional or super-grant.<br>• Article 116- Voting on accounts, credits and exceptional grants.<br>• Article 117- Special provisions of money bills.<br>• Article 118- Rules of procedure.<br>• Article 119 - Regulations made by Parliament in the course of law in relation to finance and commerce.<br>• Article 120 - Languages used in Parliament.<br>• Article 121 - Prohibition on debate in Parliament.<br>• Article 122 - Courts cannot inquire into parliamentary proceedings |
| **பாராளுமன்றம்**<br>• மத்திய அரசின் சட்டம் இயற்றும் அங்கமாக பாராளுமன்றம் திகழ்கிறது.<br>• இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பகுதி V-ல் சரத்து 79 முதல் 122 வரை இதன் பணிகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.<br>• இந்திய பாராளுமன்றம் 3 பகுதிகளை கொண்டது. அவை (சரத்து 79) | Parliament<br>• Parliament is the legislative arm of the central government.<br>• Its functions are clearly explained in Part V of the Constitution of India, from Articles 79 to 122.<br>• The Parliament of India consists of 3 parts. They are (Article 79) |

| | |
|---|---|
| 1. குடியரசுத் தலைவர் | 1. President |
| 2. மாநிலங்களவை (ராஜ்ய சபா) | 2. Rajya Sabha |
| 3. மக்களவை (லோக் சபா) | 3. Lok Sabha |
| • இந்திய பாராளுமன்றமானது மாநிலங்களவை என்னும் மேலவையையும், மக்களவை என்னும் கீழவையையும் கொண்டுள்ளதால் இது ஈரவை சட்டமன்றம். என்று அழைக்கப்படுகிறது. | • The Parliament of India is called a bicameral legislature as it consists of an upper house called Rajya Sabha and a lower house called Lok Sabha. |
| • நாட்டின் அனைத்து தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, அந்நாட்டின் சட்டங்களை இயற்றுதல் அல்லது மாற்றுதல் செய்யும் ஓர் உயர்ந்த சட்டம் இயற்றும் அமைப்பே சட்டமன்றம் என பொதுவாக குறிப்பிடப்படுகின்றது. | • The legislature is generally referred to as the supreme legislative body of the country, consisting of representatives elected from all the constituencies of the country, which makes or amends the laws of the country. |
| • இந்தியா முழுமைக்குமான சட்டங்களை இயற்றும் சட்டமன்றம் பாராளுமன்றம் அல்லது தேசிய சட்டமன்றம் என்று குறிப்பிடப்படுகிறது. | • The legislature that makes laws for the whole of India is referred to as Parliament or the National Assembly. |
| • குடியரசுத் தலைவர் பின்வரும் பாராளுமன்றத்தின் செயல்பாடுகளுக்கு பொறுப்பாக இருப்பதால் அவரும் பாராளுமன்றத்தின் தவிர்க்க முடியாத அங்கமாகும். | • The President is also an indispensable part of Parliament as he is responsible for the following functions of Parliament: |
| 1. கூட்டத்தொடருக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் சிறப்புரையாற்றுதல் | 1. Summoning the session and delivering special addresses |
| 2. அவை ஒத்திவைத்தல் | 2. Prorogating the Houses |
| 3. மக்களவையை கலைத்தல் | 3. Dissolving the Lok Sabha |
| 4. இரு அவைகளிலும் உரையாற்றுதல் | 4. Addressing both Houses |
| 5. அவசர சட்டங்களை பிறப்பித்தல் | 5. Promulgating Emergency Laws |

| | |
|---|---|
| • இந்திய குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் இரு அவைகளில் எதிலும் உறுப்பினராக இல்லாமல் இருந்தாலும், பாராளுமன்ற அமர்வில் பங்கு கொள்ளாமல் இருந்தாலும் அவர் பாராளுமன்றத்தை ஒருங்கிணைக்கும் அங்கமாக விளங்குகிறார். | • The President of India, although not a member of either House of Parliament or participating in the session of Parliament, is the unifying body of Parliament. |
| • பாராளுமன்ற இரு அவைகளிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு பிறகே சட்டமாக நிறைவேற்றப்படுகிறது.<br><br>• இந்திய பாராளுமன்றத்திற்கு இரு முக்கியமான அதிகாரங்கள் மற்றும் பணிகள் உள்ளன. அவை<br>1. சட்ட அதிகாரம் சட்டம் இயற்றுவதற்கானவை<br>2. நிதி அதிகாரம் நிதிநிலை அறிக்கை<br><br>• மேலும் இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் பணியும் பாராளுமன்றத்திற்கு இருக்கின்றது.<br><br>• குடியரசுத் தலைவர், துணை குடியரசுத்தலைவர். உச்சநீதிமன்ற நீதிபதிகள், மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் மீதான பதவிநீக்க தீர்மானத்தை விவாதிக்கவும், அத்தீர்மானத்தை நிறைவேற்றி பதவி நீக்கம் செய்யவும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு பதவி நீக்கம் செய்யப்படும் நடைமுறை "பழிச்சாட்டுதல் நடைமுறை" என்றழைக்கப்படுகிறது. | • A bill passed by both the houses of Parliament becomes a law only after the assent of the President.<br><br>• The Indian Parliament has two important powers and functions. They are<br>1. Legislative power to enact laws<br>2. Financial power to pass the budget<br><br>• The Parliament also has the task of electing the President and Vice President of India.<br><br>• The President, Vice President. Parliament has the power to discuss the removal of judges of the Supreme Court and High Courts and to pass the removal of judges. The process of such removal is called "impeachment procedure". |
| மாநிலங்களவை | |
| • மாநிலங்களவை அல்லது மேலவையானது இந்திய பாராளுமன்றத்தின் இரண்டாவது ஆட்சி மன்றமாகும்.<br><br>• அமெரிக்காவிலுள்ள ஆட்சிமன்ற குழுவைப் போல மாநிலங்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் ஒரு அமைப்பாக மாநிலங்களவை செயல்படுகிறது. | • The Rajya Sabha or the Upper House is the second house of the Indian Parliament.<br><br>• The Rajya Sabha functions as a body to protect the rights and interests of the states, similar to the Legislative Assembly in the United States. |

| | |
|---|---|
| • 1952-ம் ஆண்டு ஏப்ரல் 3-ம் தேதி மாநிலங்களவை உருவாக்கப்பட்டது.<br>• இதன் முதல் கூட்டம் 1952, மே 13 அன்று தொடங்கியது.<br>• மாநிலங்களவை 250-க்கும் மிகாத உறுப்பினர்களை கொண்டது.<br>• இவ்வுறுப்பினர்களில் 238 நபர்கள் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்தும் அவற்றின் மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.<br>• மீதமுள்ள 12 நபர்கள் இலக்கியம், அறிவியல், விளையாட்டு, கலை மற்றும் சமூக சேவை போன்றவற்றில் அனுபவம் கொண்டவர்களை உறுப்பினர்களாக குடியரசுத் தலைவர் நியமிப்பார்.<br>• தற்போது மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 245 ஆகும். அதில் 233 நபர்கள் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்தும், 12 நபர்கள் நியமன உறுப்பினர்களாகவும் உள்ளனர். | • The Rajya Sabha was formed on 3 April 1952.<br>• Its first session began on 13 May 1952.<br>• The Rajya Sabha consists of not more than 250 members.<br>• Of these members, 238 are elected from various states and union territories according to their population.<br>• The remaining 12 are nominated by the President from among those with experience in literature, science, sports, art and social service.<br>• The present strength of the Rajya Sabha is 245. Of these, 233 are from states and union territories and 12 are nominated members. |
| • மாநிலங்களவையின் சிறப்பம்சத்தை வலியுறுத்தும் வகையில் இராஜ்யசபா அல்லது மேலவை என்னும் பெயர் 1954-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் தேதி மாநிலங்களவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.<br>• ஆரம்பத்தில் இந்த அவை கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ் என்றே அழைக்கப்பட்டது. | • The name Rajya Sabha or Upper House was announced by the Chairman of the Rajya Sabha on 23 August 1954 to emphasize the special nature of the Rajya Sabha.<br>• Initially, this House was called the Council of States. |
| **தேர்தல் முறை மற்றும் பதவிக்காலம்**<br>• மாநிலங்களவைக்கான தேர்தல் மறைமுகமானது ஆகும். மாநிலங்கள் சார்பாக உறுப்பினர்களை மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றி ஒற்றை மாற்று வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். | **Election method and tenure**<br>• Election to the Rajya Sabha is indirect. The members are elected by the states by the persons elected to the state legislatures through the single-member constituency system.<br>• |

| | |
|---|---|
| • மாநிலங்களவை ஒரு நிரந்தர அவையாகும். அதனை கலைக்க கலைக்க முடியாது ஆனால் $\frac{1}{3}$ பங்கு உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுகின்றனர். காலியான இடங்களுக்கு மீண்டும் தேர்தல் நடைபெறும்.<br><br>• ஒரு உறுப்பினரின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். அதன் பின்னர் அவர் எத்தனை முறை வேண்டுமானாலும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். | • The Rajya Sabha is a permanent house. It cannot be dissolved but 1/3rd of the members retire every 2 years. Re-election is held to fill the vacancies.<br><br>• The term of office of a member is 6 years. After that, he can be re-elected any number of times. |
| **மாநிலங்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்**<br>1. இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.<br>2. 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.<br>3. அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தல் கூடாது.<br>4. மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்ற கடனைத் திருப்பித்தர முடியாதவராகவோ இருத்தல் கூடாது.<br>5. பாராளுமன்றத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும்.<br>6. மக்களவையிலோ அல்லது எந்தவொரு சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது.<br>7. ஏதேனும் ஒரு பாராளுமன்றத் தொகுதியில் வாக்காளராக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>8. குற்ற வழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றிருக்கக் கூடாது. | |

| | |
|---|---|
| • மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951-ன் கீழ் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் ஒரு நபர் அந்த மாநிலத்தின் பாராளுமன்ற தொகுதியில் ஒரு வாக்காளராக இருக்க வேண்டும்.<br><br>• மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 3-வது பிரிவானது மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டம் 2003-ன் வாயிலாக திருத்தப்பட்டு மாநிலங்களவைக்கு போட்டியிடும் ஒருவர் எந்த மாநிலத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றாரோ, அந்த மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விலக்கிக் கொள்ளப்பட்டது. | • A person seeking election to the Rajya Sabha under the Representation of the People Act, 1951, must be an elector in the parliamentary constituency of that State.<br><br>• Section 3 of the Representation of the People Act was amended by the Representation of the People Amendment Act, 2003, removing the condition that a candidate for the Rajya Sabha should be a resident of the State from which he is elected. |
| மாநிலங்களவை தலைவர் (Chairman of Rajya sabha)<br><br>• இந்திய துணை குடியரசுத் தலைவர் தன்னுடைய பதவியின் அடிப்படையில் மாநிலங்களவையின் தலைவராக பொறுப்பேற்பார். இம்முறையை (எக்ஸ் அபிசியோ சேர்மன் (Ex-officio chairman) என்று குறிப்பிடுவர்.<br><br>• இவர் மாநிலங்களவையின் உறுப்பினர் அல்ல ஆனால் அவையை தலைமையேற்று நடத்துபவர் இவரே ஆவார்.<br><br>• துணைக் குடியரசுத் தலைவர் பதவி காலியாகும் பட்சத்தில் அவருடைய மாநிலங்களவைத் தலைவர் பதவியும் காலியாகும்.<br><br>• இவருக்கு வாக்களிக்கும் அதிகாரம் இல்லை ஆனால் முடிவுசெய் வாக்கினை (Casting vote) செலுத்தும் அதிகாரம் உண்டு.<br>Art→100<br><br>• துணைக் குடியரசுத்தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் உள்ள போது இவர் அவை நடவடிக்கைகளில் பேசுவதற்கும், பங்கேற்பதற்கும் உரிமை உண்டு. ஆனால் அவைக்குத் தலைமை தாங்க முடியாது. | Chairman of Rajya Sabha<br><br>• The Vice President of India is the ex-officio Chairman of the Rajya Sabha. This is called the Ex-officio Chairman.<br><br>• He is not a member of the Rajya Sabha but he presides over the House.<br><br>• If the office of the Vice President falls vacant, his office of Chairman of the Rajya Sabha also falls vacant.<br><br>• He does not have the right to vote but has the power to cast a casting vote.<br><br>• He has the right to speak and participate in the proceedings of the House when a resolution to remove the Vice President from office is under consideration. But he cannot preside over the House. |

| | |
|---|---|
| (ராஜ்யசபா துணைத் தலைவர்)<br><br>• மாநிலங்களவை உறுப்பினர்களில் இருந்து துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.<br><br>• மாநிலங்களவை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை மறைமுகத் தேர்தல் மூலம் மாநிலங்களவை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கின்றனர்.<br><br>• இவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. அவைத்தலைவராக செயல்படும் போது முடிவுசெய் வாக்கு (Casting Vote) மட்டுமே உண்டு. | (Deputy Chairman of Rajya Sabha)<br><br>• The Deputy Chairman is elected from among the members of Rajya Sabha.<br><br>• The members of Rajya Sabha elect one of their number as the Deputy Chairman of Rajya Sabha through secret ballot.<br><br>• He has the right to vote. He has only a casting vote when acting as Chairman. |
| • சுதந்திர இந்தியாவின் முதல் மாநிலங்களவை தலைவர் - டாக்டர்.S.இராதாகிருஷ்ணன்<br><br>• சுதந்திர இந்தியாவின் முதல் மாநிலங்களவை துணைத் தலைவர்- S.V.கிருஷ்ணமூர்த்தி ராவ் | • First Chairman of the Rajya Sabha of Independent India - Dr. S. Radhakrishnan<br><br>• First Deputy Chairman of the Rajya Sabha of Independent India - S.V. Krishnamurthy Rao |
| மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள்<br><br>• சரத்து 249-ன் படி மாநிலப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில துறைகளை "மாநிலங்களவையின் $\frac{2}{3}$ பங்கு சிறப்பு பெரும்பான்மை மூலம் மத்திய பட்டியலுக்கு மாற்றும் அதிகாரம் இந்த அவைக்கு உண்டு.<br><br>• சரத்து 312-ன் படி மாநிலங்களவையானது சிறப்பு பெரும்பான்மையின் மூலம் புதிய அகில இந்திய பணிகளை உருவாக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.<br><br>• துணை குடியரசுத் தலைவரின் பதவி நீக்க தீர்மானத்தை மாநிலங்களவையில் தான் முதலில் கொண்டுவர முடியும். சிறப்பு பெரும்பான்மையின் மூலம் துணை குடியரசுத் | Special Powers of the Rajya Sabha<br><br>• Article 249 empowers the Rajya Sabha to transfer certain departments specified in the State List to the Union List by a special majority of (2)/3rds of the Rajya Sabha.<br><br>• Article 312 empowers the Rajya Sabha to create new All India Posts by a special majority.<br><br>• A resolution to remove the Vice President from office can be first moved in the Rajya Sabha. The Rajya Sabha removes the Vice |

| | |
|---|---|
| தலைவரை மாநிலங்களவை பதவி நீக்கம் செய்கிறது. அதை சாதாரண பெரும்பான்மையின் மூலம் மக்களவை ஏற்றுக்கொள்கிறது. | President from office by a special majority. The Lok Sabha accepts it by a simple majority. |